செ.வெ.எண். 1 நாள். 2.12.2011

**இராசிபுரம் சட்டமன்ற தொகுதி வடுகமுனியப்பம்பாளையம் ஊராட்சியில் 249 இல்லத்தரசிகளுக்கு பொன்குறிச்சி ஊராட்சியில் 446 இல்லத்தரசிகளுக்கும், மாட்டுவேலம்பட்டி ஊராட்சியில் 249 இல்லத்தரசிகளுக்கும் பொன்பரப்பிப்பட்டி ஊராட்சியில் 537 இல்லத்தரசிகளுக்கும் என மொத்தம் 1639 இல்லத்தரசிகளுக்கு ரூ.84.24 லட்சம் மதிப்பிலான இலவச மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர்களை மாண்புமிகு சட்டப்பேரவை துணைத்தலைவர் திரு.ப.தனபால் அவர்கள் வழங்கினார்.**

இராசிபுரம் சட்டமன்ற தொகுதிகளில் 1639 இல்லத்தரசிகளுக்கு ரூ.84.24 லட்சம் மதிப்பிலான இலவச மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர்களை மாண்புமிகு சட்டப்பேரவை துணைத்தலைவர் திரு.ப.தனபால் அவர்கள் வழங்கி பேசியதாவது: மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தேர்தல் வாக்குறுதியில் அறிவித்தவைகள் அனைத்தும் தற்போது திட்டங்களாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏழை எளிய மக்களுக்கு அன்றாட வாழக்கையில் பயன்பெறும் வகையில் விலையில்லா மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர்கள் அரசின் சார்பில் வழங்கப்பட்டு வருகிறது. எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் முதல்வர் அவர்கள் செயல்பட்டு வருகிறார். ஆட்சி பொறுப்பேற்ற ஆறு மாத காலத்திற்குள் ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது. விலையில்லா 20 கிலோ அரிசி, திருமாங்கல்யத்திற்கு 4 கிராம் தங்கம், கிராமப்புற ஏழை பெண்கள் வாழ்க்கைத்தரம் உயர கறவை மாடுகள், ஏழ்மையிலும் ஏழ்மையாளர்களுக்கு தலா 4 ஆடுகள், மாணவ மாணவியர்களுக்கு இலவச சைக்கிள், மடிக்கணினி, கல்வி ஊக்கத்தொகைகள் ஆகியவைகள் வழங்கப்பட்டு வருகிறது. ஏழை எளிய மக்கள் வாழ்வதற்கு அரசின் திட்டங்கள் உறுதுணையாய் உள்ளது. அரசின் திட்டங்களை பெற்று மக்கள் தங்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு மாண்புமிகு சட்டப்பேரவை துணைத்தலைவர் அவர்கள் பேசினார்.

நிகழ்ச்சியில் மாண்புமிகு சட்டப்பேரவை துணைத்தலைவர் அவர்கள் 1639 இல்லத்தரசிகளுக்கு ரூ.84.24 லட்சம் மதிப்பிலான விலையில்லா மின்விசிறி, மிக்ஸி, கிரைண்டர்களை வழங்கினார்.

நிகழ்ச்சிக்கு நாமக்கல் சார் ஆட்சியர் டாக்டர். டிஜி.வினய் இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார். மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.வை.சுவாமிநாதன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். துணை ஆட்சியர் (சிறப்பு திட்ட அமலாக்கம்) திரு.கு.கார்த்திகேயன் அவர்கள் நன்றி கூறினார்.

விழாவில் மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் திரு.ஏ.பி.பழனிவேல், நாமகிரிப்பேட்டை ஒன்றியக்குழு தலைவர் திரு.இ.கே.பொன்னுசாமி, ராசிபுரம் ஒன்றியக்குழு தலைவர் திருமதி.கா.லட்சுமி காளியப்பன், வெண்ணந்தூர் ஒன்றியக்குழு தலைவர் திருமதி ஆர்.தமிழ்செல்வி, ஆர்.புதுப்பட்டி பேரூராட்சி தலைவர் திரு.எல்.எஸ்.மணி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் திருமதி.கே.கலாவதி, திருமதி.ராஜேஸ்வரி முருகேசன் திரு.க.சந்திரசேகரன் ஒன்றியக்குழு உறுப்பினர்கள் திருமதி.விஜியா சுந்தரம், சாந்தி பாலசுப்ரமணியம், மாதேஸ்வரி, சீனுவாசன், திருமதி. தங்கபொண்ணு, ஊராட்சி மன்ற தலைவர்கள் ஏ.சிவாஜி (வடுக முனியப்பம்பாளையம், திருமதி.பெருமாயி இராமாசி (பொன்குறிச்சி, திருமதி. ஜி. சிவகாமி (மாட்டு வேலம்பட்டி) திருமதி. டி.பேபி (அனந்தகவுண்டம்பாளையம், திரு.ஏ.கிருஷ்ணமூர்த்தி (பொன்பரப்பிபட்டி) உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல்.